பக்கங்கள் 15 + 2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 17 வியாழக்கிழமை 03.10.2024 | அதிர்வு 63

## வெள்ளவத்தையில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

வெள்ளவத்தை கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இன்று வியாழக்கிழமை 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பகிரங்க அறிவிப்பு

# ‘சங்கு’ சின்னம் எங்கள் வசம்!

## வடக்கு, கிழக்கு முழுவதும் களமிறங்கத் தீர்மானம் கொழும்பில் போட்டியிடுவது தொடர்பிலும் ஆராய்வு

- எஸ்.நிதர்ஷன் -

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தேர்தல் ஆணையகத்தால் தற்போது சங்கு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வடக்கு, கிழக்கு முழுவதும் கூட்டணியாகச் சங்குச் சின்னத்தில் போட்டியிடவுள்ளோம். அதேநேரத்தில் இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.” 02




# அரசியல் பழிவாங்கல் இனிமேல் நடக்காது!

## ஜனாதிபதி அநுர உறுதி



வினைத்திறன்மிக்க மக்கள் நல அரச சேவையை உருவாக்க தம்மை அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காக தாம் துணை நிற்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குடிமக்களுக்காகப் பாடுபடும் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை இதுவரை காலமும் இருந்தபோதும் அந்தச் சம்பிரதாயம் இனிமேலும் நடக்காது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராக இன்று வியாழக்கிழமை காலை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் 07

# ஜனாதிபதி - சுமந்திரன் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று மாலை சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த சுமந்திரன், சமகால அரசியல் விடயங்கள் தொடர்பிலும் பேசினார் என்று அறியமுடிந்தது.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியினர்தான் எம் கூட்டணியில் இணைய வேண்டும்

## சுமந்திரனின் அழைப்புக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இப்படி பதில்

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியொரு கட்சியாகவே இப்போது இருக்கின்றது. ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினராகிய நாங்கள் ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டணியாக இருக்கின்றோம். ஆகையினால் தமிழரசுக் கட்சியினரே எமது கூட்டணியில் வந்து இணைந்துகொள்ள வேண்டும்."

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று மதியம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த்தேசியப்பரப்பிலுள்ள பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்தது போன்று தற்போதும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள பல்வேறு கட்கள் ஒன்றிணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகச் செயற்படுகின்றோம். இந்தக் கூட்டணியில் தற்போது ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஆகையினால் தமிழ் மக்களுக்கு ஐக்கியம் வேண்டும் எனக் கருதுகின்றவர்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் வந்து இணையுமாறு நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம்.

எமது இந்த அழைப்புக்குப் பதிலளிக்காத இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இந்தத் தேர்தலில் மீண்டும் வந்து போட்டியிடுமாறு கூறியிருக்கின்றனர். அந்த அழைப்பானது உளப்பூர்வமாக இல்லாமல் வெறுமனே ஏனோதானோ என்பது போல் அமைந்திருந்தது.

உண்மையில் தமிழரசுக் கட்சி தனியொரு கட்சியாகவே இப்போது இருக்கின்றது. ஆனால், நாங்கள் ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டணியாக இருக்கின்றோம். ஆகையினால் தமிழரசுக் கட்சியினரே எமது கூட்டணியில் வந்து இணைந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, தமிழ் மக்களின் ஐக்கியம் குறித்து பேசுகின்ற தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் எமது கூட்டணியில் இணைந்து செயற்பட விரும்புகின்ற பட்சத்தில் எப்போதும் வந்து இணைந்துகொள்ளலாம்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் ஒருமித்த தீர்மானத்தை எடுக்கக்கூடிய நிலைமையில் அவர்கள் இல்லை. அவர்களுக்கு இடையே உள்முரண்பாடு அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதனாலேயே அந்தக் கட்சி இப்போது நீதிமன்றமும் சென்றுள்ளது.

அவர்களால் ஒருமித்து திட்டவட்டமான தீர்மானமொன்றை எடுக்க முடியாது. இப்போது இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் தங்கள் கட்சிக்குள்ளேயே ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இவ்வாறு ஒரு கட்சிக்குள்ளேயே சுமுகமான அமைதியான சூழலை ஏற்படுத்தி ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியாதவர்கள் எவ்வாறு பொது இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.?

இதனால் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட ஆசனம் வழங்கப்படுமா என்பது கூட சந்தேகம் நிலவுகின்றது. ஆகவே, தமது கட்சிக்குள்ளேயே உள்ளக முரண்பாடுகளைத் தீர்த்து முதலில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கட்டும்.

அதன் பின்னர் ஐக்கியம் குறித்து பேசலாம். கூட்டணி குறித்தும் பேசலாம். எனவே, தமிழரசுக் கட்சியினர் தமது கட்சிக்குள்ளேயே பல பிரிவுகளாக இல்லாமல் ஓரணியாக ஒருமித்த தீர்மானத்தை எடுத்து அதனை உளப்பூர்வமாக முதலில் அறிவிக்கட்டும். அதன் பின்னர் பார்த்துக்கொள்ளலாம்." – என்றார்.

---

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் வெள்ளவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் 5 அடி 4 அங்குல உயரம் கொண்டவர் எனவும், அவருக்கு 45 வயது இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் யார் என்ற விபரம் இதுவரை வெளியாகவில்லை.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## 'சங்கு' சின்னம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று மதியம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியானது பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாக இருக்கின்றது. இந்தக் கூட்டசியில் நாங்கள் உட்பட ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போதும் நாம் அதில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவையும் தாக்கல் செய்திருந்தோம். இந்தக் கூட்டணியின் சின்னமாககே குத்துவிளக்கு இருந்தது.

ஆனால், இப்போது நடைபெற்று முடிவடைந்திருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களை ஒன்றிணைத்த தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியன இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருந்தது.

அந்தப் பொது வேட்பாளரின் தேர்தல் சின்னமாக சங்கு சின்னமும் வழங்கப்பட்டு அதற்கான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டதற்கமைய தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி இலட்சக்கணக்கில் மக்கள் அதற்கு வாக்களித்தும் இருந்தனர்.

இதேபோன்று பல்வேறு கட்சிகளை உள்ளடக்கியதாக ஒற்றுமையை வலியுறுத்தி ஓரணியில் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாங்கள் போட்டியிடுகின்றமையால் தமிழ் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக விளங்கிய சங்கு சின்னத்தை எமது கூட்டணியின் சின்னமாக்குவதற்குத் தீர்மானித்திருந்தோம்.

இதற்கமைய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஒருமித்த தீர்மானமாக சங்கு சின்னத்தை அதில் அங்கம் வகித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இருந்தது.

இதனடிப்படையில் சங்கு சின்னத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் நேற்று தேர்தல் ஆணையகத்தால் சங்கு சின்னம் எமக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது.

இதற்கமைய எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக ஒற்றுமையின் சின்னமான சங்கு சின்னத்தில் நாம் போட்டியிட இருக்கின்றோம். அதிலும் வடக்கு, கிழக்கு முழுவதும் நாம் போட்டியிடுகின்ற அதேநேரத்தில் கொழும்பிலும் இம்முறை போட்டியிடுவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்."

– என்றார்.



# இளைய சமூகத்தினரே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர்கள்

## யாழ். சங்கானையில் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் யாழ். சங்கானை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்னால் நடைபெற்றது.

சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. அந்த மதுபானசாலை அமைக்கவுள்ள இடத்துக்கு அருகாமையில் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், மதத் தலங்கள், குடிமனைகள் காணப்படுகின்றன. எனவே, அந்தப் பகுதியில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “மதுசார விலைகளைக் குறைத்து எமது சமூகத்தை அழிக்க வேண்டாம், போதையற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எமது சமூகத்தை அழிக்கும் மது எமக்குத் தேவைதானா?, முடவனாக விரும்பும் மானிடனே மதுவைக் கையில் எடுக்காதே, இளைய சமூகமே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர், சிறுவர்களையும் மகளிரையும் மதுவுக்கு அடிமைப்படுத்தாதே” எனக் கோஷமிட்டு, பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலர் திருமதி. கவிதா உதயகுமார் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர், வலிகாமம் மேற்கு ஓட்டோ சங்கத்தினர், அந்திரான் தோற்பயிற்சி உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தினர், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# நாம் மீண்டெழுவோம்!

## துரோகிகளுக்கு வேட்புமனு இல்லை என்றும் அறிவித்தது மொட்டுக் கட்சி

“நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு சென்ற எவருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியைக் காட்டிக்கொடுத்த எவரும் மீண்டும் கட்சிக்கு வரமுடியாது. மக்களுக்கு வேண்டாம் என்றால் சலூன் கதவைப் பூட்டுவதற்குத் தயார் என மஹிந்தவும் அறிவித்துவிட்டார். எனவே, அவர்களுக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது.

மொட்டுக் கட்சிக்கு தற்காலிக பின்னடைவே ஏற்பட்டுள்ளது. நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.” – என்றார்.





# அநுரவை மிரட்டும் விமல்!

## ஒற்றையாட்சியைப் பாதுகாத்தவாறே பயணிக்க வேண்டும் என வலியுறுத்து

“சர்வதேச சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றாது, ஒற்றையாட்சியைப் பாதுகாத்தபடி தேசிய மக்கள் சக்தி பயணிக்க வேண்டும்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் எம்.பி. விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.


இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“கட்சியொன்று ஆட்சிப்பீடமேறிய பின்னர் ஆரம்ப காலம் என்பது இன்பமாகவே இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிகாலத்திலும் ஆரம்ப காலம் என்பது சுவையானதாக இருந்தது. நாட்கள் செல்லத் செல்லத்தான் உண்மையான முகம் எது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

நாட்டுக்கும், மக்களுக்கும் தவறிழைக்காது, பிரிவினைவாதத்துக்குக் கப்பம் வழங்காது, வெளிநாட்டு சக்திகளின் தேவைக்கேற்ப செயற்படாது, நாட்டின் இறையாண்மை மற்றும் ஒற்றையாட்சியைப் பாதுகாத்து பயணித்தால் எவ்வித பிரச்சினையும் இருக்காது. இதற்கு நாட்டு மக்களும் ஆணை வழங்குவார்கள்.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சர்வஜன பலவேகய கட்சியின் சார்பிலேயே நாம் போட்டியிடுவோம். எதிரணிகளுக்கிடையில் கொள்கை ரீதியிலான முரண்பாடுகள் உள்ளன. எனவே, எதிரணி கூட்டணி என்பது சாத்தியப்படமாட்டாது.” – என்றார்.

ඒක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தசேியக் கட்சி
United National Party



### பொதுத் தேர்தலில் யானையைக் கைவிட்டு

# காஸ் சிலிண்டரில் களமிறங்கும் ஐ.தே.க.

இலங்கை அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலொன்றின்போது 'யானை' சின்னம் இல்லாமல் நடைபெறும் முதல் தேர்தலாக இம்முறை தேர்தல் அமையவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்பினர் பொதுச் சின்னமொன்றின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி யானை சின்னம் காஸ் சிலிண்டராக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்று ஐ.தே.க. தரப்பு தெரிவிக்கின்றது.

இலங்கையில் 1947 ஆம் ஆண்டிலேயே முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையும் பிடித்தது.

1952, 1956, 1960, 1965, 1970, 1977, 1989, 1994, 2000, 2001, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் யானை சின்னத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது.

2010, 2015 பொதுத் தேர்தல்களின்போது கூட்டணி அமைத்து ஐ.தே.க. களமிறங்கி இருந்தாலும் யானை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. 2020 பொதுத் தேர்தலின்போதுகூட யானை சின்னத்திலேயே ஐ.தே.க. தேர்தலுக்கு வந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இம்முறை 'யானை' சின்னத்தைக் கைவிட்டு பொதுச் சின்னத்தில் களமிறங்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவே புதிய கூட்டணிக்குத் தலைமை வகிக்கவுள்ளார்.

சேவல் சின்னத்தில் களமிறங்கும் என எதிர்பார்க்கப்பட்ட இ.தொ.கா., கேஸ் சின்னத்தில் கூட்டணியாகப் போட்டியிடுவது தொடர்பில் பரீசிலித்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டுள்ளார். ஆனால், இம்முறை அவர் போட்டியிடமாட்டார்.



# குளவி கொட்டி 15 தொழிலாளர்கள் பாதிப்பு

தலவாக்கலை, அக்கரபத்தன எல்பியன் தோட்டத்தில் நியூபிரஸ்டன் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் 15 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இன்று காலை வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பெண் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலை மலையில் கொழுந்து கொய்து கொண்டிருக்கையிலேயே குளவிகள் கொட்டின.

தொழிலாளர்கள் 15 பேரும் மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 11 பேர் சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வீடுகளுக்குச் சென்றனர்.

எஞ்சிய 4 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிரூபித்துக் காட்டுங்கள்

எதிரணி தரப்பில் இருந்து கொண்டு ஆளும் கட்சி மீதோ, ஆளும் தரப்பினர் மீதோ குற்றச்சாட்டுகளை அடுக்குவதும் சேறை வாரி இறைப்பதும் இலகுவான காரியம்.

அத்தகைய சேறுவாறல் மூலம் ஆளும் தரப்பை வீழ்த்தி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதும் கூட ஓரளவு தேர்ந்த தரப்புகளுக்கு இலகுவான விடயம்தான்.

ஆனால், அப்படி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், முன்பு சுமத்திய குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது ரொம்பவும் கஷ்டம்.

அத்தகைய சிக்கலில்தான் இப்போது புதிதாக ஆட்சி அதிகாரத்தை பிடித்திருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தி அரச நிர்வாகத்தினரும் சிக்கி உள்ளனர்.

இவ்வளவு காலமும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அவர்கள் அள்ளிச் சுமத்திய குற்றச்சாட்டுகளை இப்போது விசாரித்து, உண்மைகளை கண்டறிந்து விடயங்களை நிரூபிக்க வேண்டிய அசாத்தியமான பொறுப்பு அவர்களது களத்தில் உள்ளது.

முன்னர் குற்றம் சுமத்தப்பட்ட தரப்புகள் இப்போது அந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபித்துக் காட்டுங்கள் என்று அதிகாரத்தைப் பொறுப்பேற்றிருக்கும் அநுரகுமார திஸநாயக்கவிடம் சவால் விடத் தொடங்கி இருக்கின்றன.

இப்போது பந்து அநுர குமாரவின் களத்தில். இது விடயத்தில் அவரது அரசுதான் - நிர்வாகம்தான் - இனிமேல் நடவடிக்கை எடுத்து உண்மைகளை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

ராஜபக்ஷ ஆட்சியின் போது பொது நிதியைக் கொள்ளையடித்ததாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

இலங்கையின் பொது நிதி கொள்ளையிடப்பட்டு உகாண்டா மற்றும் சீஷெல்ஸ் உட்பட பல்வேறு நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னர் தெரிவித்த கூற்றுக்களின் காணொலிக் காட்சிகளை அவர் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்து அதனை நிருபிக்குமாறு சவால் விடுத்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தாம் முன்னர் சுமத்திய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய நேரம் இதுவென்றும் நாமல் ராஜபக்ஷ பதிவிட்டுள்ளார்.

“உகாண்டா மற்றும் பல்வேறு நாடுகளில் பில்லியன் கணக்கான டொலர்களை நாங்கள் பதுக்கி வைத்துள்ளோம் என்று ஜனாதிபதியும் அவரது குழுவும் பல ஆண்டுகளாகக் குற்றம் சாட்டி வருகின்றனர். ஜனாதிபதி தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய நேரம் இது.”என நாமல் ராஜபக்ஷ பதிவிட்டுள்ளார்.

ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி அமைப்பு அப்போதைய ஆளும் தரப்புகள் மீது வரிசையாகச் சுமத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, விடயங்களை விரைந்து அம்பலப்படுத்தும் நடவடிக்கையை அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு முன்னெடுக்க வேண்டும் என்று நாட்டின் பெரும்பாலான மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மதுபானச் சாலை பெர்மிட் விநியோகம் வரையான விடயங்களில் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருப்பது மறைக்கப்படக் கூடியதல்ல. இந்த விவகாரங்களில் காத்திரமான நடவடிக்கைகளை, விளக்கங்களை புதிய ஆட்சி தரப்பு முன்வைக்காவிட்டால் - வெளிப்படுத்தாவிட்டால் - மக்கள் ஆதரவை அத்தரப்பு கணிசமாக இழப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.



## அரசியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

கிராமிய வறுமையை ஒழிப்பதற்காக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மகத்தானது எனவும், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே வறுமை ஒழிக்கப்படுமா? இல்லையா? என்பது தீர்மானமாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் சம்பிரதாயம் மற்றும் பழைய அரசியல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், அரச சேவையின் செயற்பாடு தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி போன்றன தாக்கம் செலுத்தின எனவும் ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

எனவே, வினைத்திறன் மிக்க மக்கள் நல அரச சேவையை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் மோசடி மற்றும் ஊழல் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர் எனவும், அதனைத் தடுப்பதற்காகவே இம்முறை மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரச கட்டமைப்பு முழுவதும் பரவியுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவதாகவும், அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

பிரஜைகளைத் திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன் மற்றும் செயற்றிறன் மிக்க அரச சேவையை உருவாக்க தற்போதைய அரச உத்தியோகத்தரின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரச சேவையில் இதுகாலவரை இடம்பெற்று வந்த அரசியல் பழிவாங்கல், இடமாற்றம், அரச சேவையில் பதவி உயர்வு வழங்காமை போன்ற செயற்பாடுகள் தமது அரசின் கீழ் இடம்பெறாது என வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களை திருப்திப்படுத்தும் வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

எதிர்வரும் நாற்பது நாட்கள் நிலைமாற்ற காலமாகும் எனவும், அந்தக் காலப்பகுதியில் அரச சேவையை வீழ்ச்சியடையாமல் பேணுவதற்கு அரச உத்தியோகத்தர் பாடுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி சூசகமாக தெரிவித்தார்.

முன்பிருந்த அரச தலைவர்கள், அரச அதிகாரிகளை ஊடகங்களுக்கு முன்பாக கேள்வி எழுப்பியது போன்று தான் ஊடகங்களுக்கு முன்னால் அரச அதிகாரிகளைக் கேள்வி கேட்கப் போவதில்லை எனவும், இவ்வாறான ஊடகக் கண்காட்சிகளை தான் ஏற்கவில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார மேலும் தெரிவித்தார்.


அரசு ஊழியரின் கண்ணியத்தைப் பாதுகாத்து குடிமக்கள் திருப்தியடையும் அரச சேவையை உருவாக்கத் தான் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.










EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# ஜனாதிபதி விவசாயிகளுக்கு வழங்கக் கூறிய மானியத்தை நிறுத்திய தேர்தல் ஆணையம்!

**அதனை வழங்க ஆவண செய்ய வேண்டும் என்று மட்டு. மாவட்ட விவசாய அதிகார சபையின் மாவட்ட அமைப்பு கோரிக்கை**

(கனகராசா சரவணன்)

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க கடந்த காலங்களில் ஹெக் ரெயருக்கு 15 ஆயிரம் ரூபாவாக இருந்த எங்களுடைய உரமானிய கொடுப்ப னவை 25 ஆயிரம் ரூபாவாக உடனடியாக வழங்குமாறு பணித்தி ருந்தார். இதனை அடுத்து விவசாயிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷத் திலேயே இருந்தனர்.

ஆனால், இதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறி வித்துள்ளது.

இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களுடைய நலனை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய அதி கார சபையின் மாவட்ட அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு வெயூஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் நேற்று புதன் கிழமை (02) இடம்பெற்ற ஊடக மாநாட் டில் மாவட்ட விவசாய அதிகார சபையின் மாவட்ட அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

ஜனாதிபதி அநுர குமாரதிசாநாயக்க வுக்கு மாவட்ட அதிகார சபையின் சார் பில் முதலில் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனாதிபதி கடந்த சில நாள்கள் சிறந்த சில நடவடிக்கைகளை எமது நாட்டிலும் அரசியலிலும் மேற்கொண்டு வருவது எமது விவசாயிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் சந்தோசத்தை அளிக்கின்றது.

அதேபோன்று அவர் விவசாயிக ளுக்கான உரம் மானியத்துக்கான ஹெக்ரெயருக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு மாற்றுவதாக அறிவித்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டு, எமது விவசாயிகள் கிழக்கு மாவட்டத்தில் மிகவும் சந்தோஷமடைந்தனர். கடந்த காலங்களிலேயே எமது விவசாயிகள் கைவிடப்பட்டிருந்த காணிகளையும் பசளைப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை காரணமாகக் கைவிடப் பட்டிருந்த காணிகளையும் நெற்செய்கை செய்வதற்கு என்று திட்டமிட்டு இருந் தார்கள்.

எனினும் ஒரு சில தினங்களில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறி விப்பு வெளியிடப்பட்டதால் தேர்தல் ஆணையாளர் இவ்வாறான சில கொடுப்பனவுகளை தற்போது மேற் கொள்ள முடியாது எனக்கூறி ஒரு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் காரணமாக விவ சாயிகள் மிகவும் மனவேதனை அடைந் துள்ளனர். எனவே இவ்வாறான ஒரு செயற்பாடானது எமது மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் எதிர்காலத்திலே உணவு உற்பத்தியிலும் ஏனைய பொருளாதார ரீதியாகவும் பாரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போது விவசாயிகள் உழவு வேலைகளை ஆரம்பித்து விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக் கின்றனர். எனவே எமது உர மானியத் துக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப் பனவை உடனடியாக வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு பெரிய உதவியாக இருக்கும் என்று தேர்தல் ஆணையத்திடம் பணிவாக கேட்டுக் கொள்கின்றோம்.

தற்பொழுது டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் விலைகள் முதலாம் திகதியில் இருந்து ஜனாதிபதி குறைத் தது விவசாயிகளுக்கு பாரிய நிவார ணமாக அமைகின்றது.

எனவே ஜனாதிபதி எதிர்காலத்தில் எங்களுக்கான பசளை, களைநாசிக ளுக்கான விலைகளைக் குறைத்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப விவசாயிகளுக்கு பூரண ஒத்து ழைப்புக்களை வழங்க வேண்டும்.

இருந்த போதிலும் அதனை அடுத்து இந்த நாடாளுமன்றத் தேர்தல் அறி விக்கப்பட்ட பின்பு அதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. மிகுந்த சந் தோஷத்திலேயே விவசாயிகள் அனை வரும் இருந்தனர். தற்போது பாரிய ஏமாற்றத்தோடும் பாரிய வீழ்ச்சியாகவும் நாங்கள் இதனை எதிர்பார்க்கின்றோம். இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களினுடைய நலனை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைத் திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்.- என்றார்.



# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியும் கருத்தரங்கும் இன்று

பெண்களுக்கு ஏற்படும் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு பேரணியும், விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இன்று காலை பருத்தித்துறையில் இடம் பெற்றன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பிரிந்திகா செந்தூரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முதல் நிகழ்வாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்பிருந்து பேரணியாக பருத்தித்துறை பிரதேச செயலகம்வரை சென்று அங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் விழிப்புணர்வுக் கருத்துக்களை புற்றுநோய் விசேட வைத்திய நிபுணர் தனேந்திரன் நிகழ்த்தினார். இதில் யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், தாய்மார் கழக உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# அதிகாரிகளின் அசமந்த போக்கால் அவதியுறுகின்றனர் பொது மக்கள்

(மஸ்கெலியா)

அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த அரச அதிகாரிகளின் அசமந்த போக் கால் பொது மக்கள் தமது அடிப்படை தேவைகளை முக்கிய விடயங்களை செய்து கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மஸ்கெலியா தபாலகத்தில் இருந்து கொழும்பு நோக்கி அனுப்பப் படும் பதிவுத் தபால்கள் மற்றும் அதிவேக தபால்கள் உரிய நேரத்தில் கிடைக்காமல் கால தாமதமாகிக் கிடைக்கப் பெறுவ தால் தங்கள் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பாதிக்கப்பட்ட ஒருவர் கூறுகையில், கடந்த 27.09.2024 ஆம் திகதியன்று மஸ்கெலியா தபால் நிலையத்தில் இருந்து கட்டு நாயக் காவுக்கு (வாகன சான்றிதழ் மட்டும் காப்புறுதி) பாதுகாப்பான ஆவணங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப் பட்டன. இந்த நிலையில் குறித்த திகதி யில் கிடைக்க பெறாமல் அவதியுற்றுள் ளனர். தபால் நிலையத்தில் பலமுறை கேட்டபோதும் குறித்த தபால் நிலையத்தை வந்தடையவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அந்த ஆவணம் ஏழு நாள்கள் கடந்த நிலையில் இன்று கிடைக்க பெற்றுள்ளது. இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் அதிவேக தபால் சேவை மூலம் அனுப்ப பட்ட முக்கிய ஆவணம் ஆறு நாள்களின் பின்னரே கிடைக்க பெற்றன. இரண்டு நாள்களில் கிடைக்க வேண்டிய குறித்த தபால்கள் இவ்வாறு கால தாமதம் ஆகிறபடியால் தமது அன்றாட முக்கிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாது உள்ளது என்று சம்பந்தப்பட்ட நபர் கருத்து தெரிவித்துள்ளார்

எனவே இவ்வாறான செயல்கள் குறித்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த முன் வர வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.



# வீடற்ற குடும்பம் ஒன்றுக்கு புதிய வீடமைக்க அடிக்கல்

(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவின் கல்மெடியா வடக்கு கிராம சேவகர் பிரிவில் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று (02) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வானது சமுர்த்தி திட்டத்தின் விசேட வீடமைப்பு ஊடாக நடை முறைப்படுத்தப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கே இவ்வாறு சுமார் 7லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இடம் பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், மாவட்ட செயலக விடய முகாமையாளர், திட்ட முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மக்கள் வாக்களிப்பு தொடர்பான படிப்பு வட்டம் யாழ். பல்கலையில்

அண்மையில் நடைபெற்று முடிவடைந்த “ஸ்ரீலங்காவின் அரச தலைவர் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு முறை” எனும் தலைப்பிலான அவையம் படிப்பு வட்டம் மக்களிடையே நிலவும் சமகால அரசியல் சிந்தனைகள் பற்றிய உரையாடல் தளமாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நேற்று (02) புதன்கிழமை கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தேர்தலுக்குப் பின்னரான நிலை மற்றும் தேர்தல் முடிவுகளில் எவ்விதம் மக்களின் சமூக, பொருண்மிய, அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது தொடர்பிலும், மக்களிடையேயான அரசியல் விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடலுக்கான தளமாக இந்த மாத “அவையம் படிப்பு வட்டம்” நகர்ந்துள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் இணைச் செயலாளர் சி.சிவகஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர். கே.ரி கணேசலிங்கம், வருகை விரிவுரையாளரும் ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரியான செல்வின் ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர்.

இது பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களிடையே சமூக, பொருண்மிய, பண்பாட்டு, அரசியல் தளங்களில் கருத்து பரிமாற்றத்துக்கான வெளியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வெளிநாட்டு சிகரெட் பக்கெட்டுகளுடன் 2 சந்தேக நபர்கள் கல்முனையில் கைது!

(பாறுக் ஷிஹான்)

வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்ட விரோதமாக ஓட்டோ ஒன்றில் சூட்சுமமான முறையில் கடத்தி வந்த இரு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

இன்று வியாழக்கிழமை (03) அதிகாலை இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் பெரிய நீலாவணை விசேட அதிரடி படை முகாமில் இருந்து விசேட தேர்ச்சி பெற்ற அணியினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதான வீதியில் வைத்து சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணம் செய்து கொண்டிருந்த ஓட்டோவை இடைமறித்து சோதனை மேற்கொண்டனர்.

இதன் போது அந்த ஓட்டோவில் சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் கடத்தி வரப்பட்ட பெருந்தொகையான சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட் பக்கெட்டுகள் மீட்கப்பட்டன. இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்டுகள் கல்முனை பகுதியில் உள்ள பாதணிகள் விற்கும் கடை ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிய வந்துள்ளது.

இதன்போது ஓட்டோவில் பயணம் செய்த கல்முனை கடற்கரைப் பள்ளி வீதி பகுதியை சேர்ந்த 58 வயதுடைய சந்தேக நபர், மருதமுனை ஹாஜியார் வீதி பகுதியை சேர்ந்த 72 வயதுடைய சந்தேக நபர் ஆகிய இருவரையும் விசேட அதிரடிப்படையினர் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி குண சிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர்கள் சான்றுப் பொருள்களுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொள்கின்றனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம்!

## தங்கச்சி மடத்தில் மீனவர்களை மீட்டு தர கோரி மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர்!!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச் சாட்டின் கீழ் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் இன்று வியாழக்கிழமை (03) உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக மீட்டு தர கோரி மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து சனிக்கிழமை மீன் பிடிக்க சென்று எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட 17 மீனவர்கள் உட்பட முன்னதாக சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள சுமார் 150 இற்கும் மேற்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இலங்கை கடற்படை வசமுள்ள நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 175 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மற்றும் நாட்டு படகுகள் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி இன்று காலை முதல் தங்கச்சிமடம் வலசை பேருந்து நிலையத்தில் விசைப்படகு மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்கள் உறவினர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வயிற்று பிழைப்புக்காக மீன் பிடிக்க சென்ற மீனவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது மிகுந்த வேதனை அளிக்கிறது.

எனவே, இலங்கை சிறையில் உள்ள தங்கள் உறவினர்களை விரைந்து மீட்டு தாயகம் அழைத்து வருவதற்கு மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று மூன்றாவது நாளாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பட்டியலுக்குக் களம் இறங்கும் கட்சிகளை ஒதுங்குமாறு கோரிக்கை!

## கிழக்கு தமிழர் ஒன்றியம் விடுத்தது

(பாறுக் ஷிஹான்)

தேர்தலில் களமிறங்கவுள்ள ஏனைய இதர கட்சிகள் தேசிய பட்டியலுக்காக களம் இறக்கப்படும். இந்தக் கட்சிகள் தயவு செய்து எங்களுடைய மாவட்டத்தின் நிலையை கருத்தில் கொண்டு தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதே மக்களுக்குச் செய்யும் கைங்கரியம்.

இவ்வாறு கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளரும் ஊடகப் பேச்சாளரும் ஓய்வு பெற்ற பிரதிக் கல்வி பணிப்பாளருமான குணாளன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பல்வேறு இன்னல்களைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்ற மக்களுடைய இன்னல்களைக் கருத்தில் கொண்டு இந்த விடயத்தைப் பதிவிட விரும்புகிறார் என்றும் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுத் தேசிய பட்டியல் ஊடாக ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டமை தற்போதைய நிலை. ஆனால் கடந்த காலத்தில் அவ்வாறில்லாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரதிநிதி ஒன்றை தெரிவு செய்தது வரலாறு. ஆனால் தற்போது அம்பாறை மாவட்டத்தை இலக்கு வைத்து பல்வேறு குழுக்கள், கட்சிகள் எல்லாம் வாக்குப் பதிவுகளைப் பெறுவதற்காக முனைந்து கொண்டிருக்கின்றன.

இதனைத் தீர்மானிப்பது வாக்காளர் பெருமக்களே. இன்று தேசிய கட்சிகளிடையே பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. இது எங்களுடைய மக்களை வெறுப்புக்குள்ளாக்கும் நிலைக்கு ஆக்கப்பட்டுள்ளது. முதலில் ஒரு தமிழ் பேசும் ஒருவர் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும். எனவே இந்த தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிய வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

தமிழரசுக் கட்சி உட்பட பிரிந்து கிடக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூரையின்கீழ் செயல்பட வேண்டும். இவ்வாறு செயற்பட முன் வருவதால் நிச்சயமாக பிரதேசத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படும்.

தேர்தல் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. காரணம் கடந்த ஜனாதிபதி தேர்தல் இதற்கான ஒரு பாடமாக அமைந்திருந்தது.

பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பொருத்தமானவர் யாராக இருந்தாலும் ஒரு கட்சியில் உள்ள




ஒருவரை தெரிவு செய்வது இந்தப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு செயற்பாடு .

மக்களை அடிமைகளாக்கி வேறு ஆசா வார்த்தைகளைக் காட்டி அவர்களைத் திசை திருப்பிவிட வேண்டாம். ஏனைய தேசிய கட்சிகளிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது, மேலும் சிறிய கட்சிகளும் உள்ளே புகுந்து இருக்கும் நிலையைக் குழப்பி விட வேண்டாம்.

ஏனைய பெரும் கட்சிகள் தமிழ் மக்களுக்கு எப்போதும் ஒன்று கூடுவார்கள் என்ற சிந்தனை அனைவருக்கும் இருக்கின்றது. அது ஒரே கூரையின் கீழ் என்பதுதான் நிச்சயம் சாத்தியமாகும். அதே நேரம் யார் பலம் உள்ளவர் யார் வேட்பாளர் என்பதைத் தெரிந்து நிறுத்துங்கள். மக்கள் நிச்சயமாக தெரிவு செய்வார்கள். அவ்வாறு மக்கள் தெரிவு செய்வதற்கு உங்களுடைய தெரிவு மிக முக்கியம். இது எங்களுடைய பணிவான வேண்டுகோள்.- என்றார்.

# மருத்துவமனையில் இருந்து ரஜினி நாளை வீடு திரும்புவார்

நடிகர் ரஜினிகாந்த் மருத்துவமனையில் இருந்து நாளை வீடு திரும்புவார் என்று அப்பல்லோ மருத்துவமனை தரப்பில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

நடிகர் ரஜினிகாந்த் உடல் நலக் குறைவு காரணமாக செப்டம்பர் 30 ஆம் திகதி கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவரது இதயத்திலிருந்து வெளியேறும் பிரதான ரத்தக் குழாயில் வீக்கம் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அறுவை சிகிச்சை இல்லாத டிரான்ஸ்கேட்டர் முறையில் அவருக்கு



சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது, அவசர சிகிச்சை பிரிவிலிருந்து தனி விடுதிக்கு ரஜினிகாந்த் மாற்றப்பட்டுள்ளார் என கூறப்படுகிறது. இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நடிகர் ரஜினிகாந்த் இன்று வீடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நாளை வீடு திரும்புவார் என அப்பல்லோ மருத்துவமனை தரப்பில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது ரஜினிகாந்த், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ‘கூலி’ படத்தில் நடித்து வருகிறார். தா.செ.ஞானவேல் இயக்கியுள்ள ‘வேட்டையன்’ ஒக்டோபர் 10 ஆம் திகதி வெளியாகவுள்ளது. இந்தப் படத்தில் அமிதாப் பச்சன், ரஜினிகாந்த், ராணா, ஃபகத் பாசில், மஞ்சு வாரியர், ரித்திகா சிங் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ள இந்தப் படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது.



# சமந்தா விவாகரத்து குறித்த சர்ச்சை கருத்தை திரும்பப் பெற்றார் தெலுங்கானா அமைச்சர்

திரை நட்சத்திரங்களான சமந்தா மற்றும் நாக சைதன்யா விவாகரத்துக்கு அரசியல் தலையீடு தான் காரணம் என தெலுங்கானா மாநில அமைச்சர் கொண்டா சுரேகா சர்ச்சையான கருத்தை தெரிவித்திருந்தார். இதற்கு எதிர்வினைகள் எழுந்த நிலையில் அமைச்சர் தனது கருத்தை திரும்பப் பெற்றுள்ளார்.

கடந்த 2017 ஒக்டோபரில் சமந்தா மற்றும் நாக சைதன்யா ஆகியோர் திருமண வாழ்க்கையில் இணைந்தனர். இந்நிலையில், கடந்த 2021 ஒக்டோபரில் இருவரும் பரஸ்பரம் பிரிய முடிவு செய்திருப்பதாக அறிவித்தனர். அதன் பின்னர் இருவரும் அவர்களது பணிகளை கவனித்து வருகின்றனர். நாக சைதன்யாவுக்கும் நடிகை சோபிதா துலிபாலாவுக்கும் கடந்த ஆகஸ்ட் மாதம் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது.

இந்நிலையில், தெலுங்கானா சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சரான கொண்டா சுரேகா, சமந்தா – நாகசைதன்யா குறித்து தெரிவித்த கருத்துகள் கடும் சலசலப்பை ஏற்படுத்தின. இருவரது பிரிவுக்கும் தெலங்கானா முன்னாள் அமைச்சரும், சந்திரசேகர் ராவின் மகனுமான கே.டி.ராமாராவ்தான் காரணம் என்று கொண்டா சுரேகா தெரிவித்திருந்தார்.

இதற்கு நடிகர்கள் நாகர்ஜுனா, நாக சைதன்யா, சமந்தா மற்றும் நானி ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர். முன்னாள் அமைச்சர் கே.டி.ராமாராவ், அவதூறு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். தனிப்பட்ட நபர்களின் குடும்ப வாழ்க்கையில் அரசியல் செய்ய வேண்டாம் என பலரும் கருத்து தெரிவித்தனர். இந்த சூழலில் அமைச்சர் கொண்டா சுரேகா தனது கருத்தை திரும்பப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதள பதிவில் அவர் குறிப்பிடுகையில்,

“என்னுடைய அரசியல் பயணத்தில் அரசியல் ஆதாயத்துக்காக யாருடைய குடும்பப் பிரச்சினை அல்லது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேசியது இல்லை. நான் சமந்தா மற்றும் அவரது குடும்பத்தை இழிவுப்படுத்தவில்லை. நான் எப்போதும் அடிப்படையை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைப்பதில்லை. எனது பேச்சும், கருத்தும் உங்களை புண்படுத்தி இருந்தால், அதற்காக எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களை இழிவுப்படுத்தும் அரசியல் தலைவாரி நோக்கி தான் நான் கேள்விகளை எழுப்பி இருந்தேன். சமந்தாவின் உணர்வுகளை புண்படுத்தும் நோக்கில் அதனை செய்யவில்லை. நீங்கள் தன்னம்பிக்கையுடன் வளர்ந்த விதம் குறித்து நான் அறிவேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஈரானின் தாக்குதலால் உச்சக்கட்ட பதற்றம் இஸ்ரேல் பிரதமருக்கு கொலை மிரட்டல்

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், இஸ்ரேலுக்கு முழு ஆதரவாக இருப்போம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமருக்கு ஈரான் கொலை மிரட்டல் விடுத்துள்ளதால் மத்திய கிழக்கு பகுதியில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கு பகுதியில் உள்ள இஸ்ரேல், பலஸ்தீனம் இடையே நீண்ட காலமாக மோதல் நீடிக்கிறது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீனத்தின் காசா பகுதியைச் சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர். இதையடுத்து, கடந்த ஓராண்டாக காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு நடுவே, ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் வடக்கு இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. இதையடுத்து, கடந்த சில வாரங்களாக இஸ்ரேல் இராணுவம் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை குறிவைத்து வான்வழி தாக்குதலை நடத்தியது.

கடந்த 27 ஆம் திகதி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார்.

இந்நிலையில், இஸ்ரேல் இராணுவம் தெற்கு லெபனான் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் தரைவழி தாக்குதலை தொடங்கியது. இதனிடையே, இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்கள் மீது ஈரான் இராணுவம் நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கும் மேற்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், "ஈரான் 180 ஏவுகணைகளை வீசியது. அவற்றை எங்கள் நாட்டின் அயன் டோம் சாதனங்கள் இடைமறித்து அழித்தன. எனினும், சில ஏவுகணைகள் இஸ்ரேல் பகுதியில் விழுந்தன. இதில் சிலர் காயமடைந்தனர்" என கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஈரான் புரட்சிகர படை (ஐ.ஆர்.ஜி.சி) வெளியிட்ட அறிக்கையில்,

"ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் எங்கள் தளபதி அபாஸ் நில்போரோஷான் ஆகிய இருவரையும் கொன்றதால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினோம். டெல் அவிவ் நகரைச் சுற்றியுள்ள 3 இராணுவதளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். 90 சதவீத ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கை தாக்கின" என தெரிவித்துள்ளது.

ஈரான் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறும்போது,

"ஈரான் பெரிய தவறை செய்துள்ளது. இதற்கு அந்த நாடுபெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும்." – என்றார்.

எச்சரிக்கையை மீறி நடந்த இந்த தாக்குதலால் அமெரிக்கா ஆவேசம் அடைந்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று கூறும் போது,

"ஈரான் ஏவுகணைகளை இடைமறித்து தாக்க இஸ்ரேல் இராணுவத்துக்கு உதவுமாறு அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்துக்கு உத்தரவிட்டிருந்தேன். இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவாக உள்ளது. தேசிய பாதுகாப்புக் குழு இஸ்ரேல் அதிகாரிகள் மற்றும் அங்குள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளது." – என்றார்.

மேலும் இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக தாக்குதல் நடத்தினால் மிகக் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவம் லெபானானின் தெற்கு பகுதியில் 2 ஆவது நாளாக நேற்றும் தரைவழி தாக்குதல் நடத்தியது. மேலும் கூடுதல் இராணுவவீரர்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் லெபனான் எல்லையில் உள்ள சுமார் 40 கிராம மக்கள்வெளியேற வேண்டும் என இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த நிலையில், 3 தளபதிகள் உட்பட 8 வீரர்கள் உயிரிழந்தனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

"மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலவரத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். தேவையின்றி இந்தியர்கள் யாரும் ஈரானுக்கு செல்ல வேண்டாம். ஈரானில் தங்கியிருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அங்குள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும். இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக, இந்திய தூதரகம் இஸ்ரேல் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருகிறது." என கூறப்பட்டுள்ளது.

ஈரான் தாக்குதல் நடத்திய பிறகு, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாதுகாப்புத் துறைக்கான அமைச்சரவைக் குழுவுடன் ஆலோசனை நடத்தினார். இதில் ஈரானுக்குதக்க பதிலடி தருவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனுடனும் பெஞ்சமின் நெதன்யாகு ஆலோசனை நடத்த உள்ளார்.

குறிப்பாக, ஈரானின் எண்ணெய், எரிவாயு மற்றும் அணு உலை தொடர்பான கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன்மூலம் அந்த நாட்டின் பொருளாதாரம் சீரழியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலில் உள்ள பாதுகாப்பு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை விரைவில் கொன்று விடுவோம் என ஈரான் உளவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே பிரான்ஸ், இஸ்ரேல் அழைப்பின் பேரில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய கிழக்கு பகுதி நிலவரம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

பக்கங்கள் 02

கனடா முரசு

வியாழக்கிழமை 03/10/2024

## கனடாவில் சிறிய, நடுத்தர வியாபாரிகளுக்கு சலுகை

கனடாவில் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு சலுகை வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இவ்வாறு சலுகை வழங் 02





# கனடாவில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

**அமெரிக்கா துறைமுகப் பணியாளர்கள் முன்னெடுத்துள்ள போராட்டமானது உலகம் முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்களை பாதிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.**

**குறிப்பாக கனடிய வாடிக்கையாளர்களை அது மோசமாக பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**துறைமுக பணியாளர்களின் போராட்டமானது பொருள்களுக்கான தட்டுப்பாட்டை உருவாக்கும் என தெரிவிக்கப்படுகிறது.**

இது பொருள்களின் விலைகளை மேலும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி வகைகள் பல வகைகள் போன்றன மட்டுமன்றி வாகனங்கள், இலத்திரனியல் சாதனங்கள் என்பனவும் இறக்குமதி செய்யப்படுகின்ற நிலையில் துறைமுகப் பணியாளர்களின் போராட்டமானது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக விநியோக சங்கிலி பிரச் சினையை உருவாக்கும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சுமார் 4500 பணியாளர்கள் இந்த போராட்டத்தில் குதித்துள்ளனர்.

அமெரிக்க துறைமுக பணியாளர்களின் போராட்டம் காரணமாக கனடாவில் சில பொருட்களுக்கு கடும் தட்டுப்பாட்டு நிலை ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அன்னாசி, வாழைப்பழம் போன்ற பழ வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராட்டம் நீடித்தால் பல்வேறு பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவும் எனவும் விலை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவில் இடம்பெற்ற மோசடியில் சிக்கி பெருந்தொகை பணத்தை இழந்த தம்பதி

கனடாவின் கோட்ரேஜ் பகுதியில் வசிக்கும் தம்பதியினர் மோசடி சம்பவம் ஒன்றில் சிக்கி 33000 டொலர்களை இழந்துள்ளனர்.

ஒன்றாரியோவின் ஹோரோன் பகுதியில் இந்த இடம் அமைந்துள்ளது.

தொலைபேசி ஊடாக இந்த மோசடி இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வங்கியில் இருந்து பேசுவது போல் பேசி இந்த தம்பதியினரை நபர் ஒருவர் ஏமாற்றியுள்ளார்.

கடன் அட்டை தகவல்களைப் பெற்றுக் கொண்டு மோசடி இடம் பெற்றுள்ளது.

வாங்கி தகவல்களை வழங்கி சில மணித்தியாலங்கள் இவ்வாறு பணம் களவாடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



எவ்வாறு எனினும் வாங்கி தகவல்கள் கடனட்டை, வங்கி அட்டைகள் குறித்த தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.



# கனடாவில் புதிய புலம்பெயர்தல் விதிகள் அறிமுகம் உணவகம், நிறுவனங்கள் நடத்துவோருக்கு நெருக்கடி

கனடாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய புலம்பெயர்தல் விதிகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

இதன் காரணமாக கனடாவில் உணவகங்கள் உட்பட பல நிறுவனங்களை நடத்துவோருக்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலம்பெயர் பணியாளர்கள் இல்லாவிட்டால், தாங்கள் உணவகங்களையே மூடவேண்டிய நிலை ஏற்படும் என பல உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல பணிகளில் தட்டுப்பாடு நிலவும் நிலையிலும், கனடா அரசு குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

பல பணிகளில் தட்டுப்பாடு நிலவும் நிலையிலும், கனடா அரசு குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் பலருடைய பணி அனுமதி காலாவதியாகவுள்ளது. இந்நிலையில், அவர்கள் அனைவரையும் மீண்டும் பணிக்கு எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு வருடத்துக்குதான் பணி அனுமதிகளும் வழங்கப்பட உள்ளது. இவ்வாறான நிலையில் பணி வழங்குவோர், புதிதாக பணியாளர்களை பணிக்கு அமர்த்தி, அவர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசின் குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் எண்ணிக்கையைக் குறைக்கும் திட்டத்தால் புலம்பெயர் தொழிலாளர்கள் கடும் அவதிக்குள்ளாக இருப்பதுடன், பல தொழில்கள் மூடப்படும் அபாயமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# உலகிலேயே மிகவும் பாதுகாப்பாக சுற்றுலா செல்லக்கூடிய நாடு கனடா

உலக அரங்கில் இந்த ஆண்டின் உலகில் மிகவும் பாதுகாப்பாக சுற்றுலா செய்யக்கூடிய நாடாக கனடாவிற்கு சிறந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த விடயமானது அமெரிக்காவின் சுற்றுலா காப்புறுதி நிறுவனம் ஆய்வு நடத்தி வெளியிட்டுள்ள பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலின் பிரகாரம் உலகின் மிகவும் பாதுகாப்பான சுற்றுலா செய்யக்கூடிய நாடுகளின் வரிசையில் கனடா முதலிடத்தையும் சுவிட்சர்லாந்து இரண்டாம் இடத்தையும் நோர்வே மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

எனினும், கனடா மிகவும் பாதுகாப்பான நாடு என்ற போதிலும் நாட்டின் சில காட்டுப் பகுதியில் நிலவி வரும் காட்டுத்தீயை அண்டிய பகுதிகளிலான காற்றை சுவாசிப்பதனால் உடல் உபாதைகள் ஏற்படக்கூடும் எனவும் இவ்வாறான பகுதிகளுக்கு சுவாச பிரச்சனையுடையவர்கள் சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளக்கூடாது எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

வன்முறைகள் மற்றும் ஆயுதப் போராட்டங்கள் போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த நாடுகளின் வரிசை பட்டியலில் முதல் 15 இடங்களில் அவுஸ்திரேலியா, பிரித்தனியா, நெதர்லாந்து, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கார்பன் வரி மீள் கொடுப்பனவு தொகை வழங்கப்பட உள்ளது.

நீண்ட காலமாக கார்பன் வரி மீள் கொடுப்பனவு தொகை வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு இறுதியில் குறித்த தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

கனடாவைச் சேர்ந்த சுமார் ஆறு லட்சம் வியாபார நிறுவனங்களுக்கு 2.5 பில்லியன் டொலர்கள் இவ்வாறு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019-2020 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளில் திரட்டப்பட்ட கார்பன் வரி வருமானத்தின் ஊடாக இந்த கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

வியாபார நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த கொடுப்பனவுத் தொகை நிர்ணயம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.